யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 20 புதன்கிழமை (02-04-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 126

# அரசிலிருந்து வெளியேறப்போவதாக லங்கா சமசமாஜக் கட்சி எச்சரிக்கை!

## தனியார் மயப்படுத்தலுக்கு எதிராகப் போர்க்கொடி

கொழும்பு, ஏப்ரல் 2

**தங்களது கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தனியார் மயப்படுத்தலை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு தொடர்ந்து மேற்கொள்ளுமாயின் அந்த அரசிலிருந்து லங்கா சமசமாஜக் கட்சி வெளியேறிவிடும்.**

**இவ்வாறு அக்கட்சியின் பிரமுகரும் அரசுத்தரப்பு எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.**

'ஷெல்' நிறுவனத்தையும், உருக்குக் கூட்டுத்தாபனத்தையும் அரசு தனியார் மயப்படுத்தி விட்டது. துறைமுக அதிகார சபையை தனியார் மயப்படுத்த அரசு முயல்வதாக அறிகின்றோம். இது பாரதூரமான விடயமாகும்.

இவை தொடர்பாக எமது அதிருப்தியையும் எதிர்ப்பையும் அரசுக்குத் தெரிவித்துள்ளோம்.

பொது மக்களின் சொத்துக்களைப் பாதுகாக்கும் உரிமையும் கடமையும் எமக்கு உள்ளன.

தேசிய வளங்கள், தொழிலாளர்களின் உரிமைகள், நாட்டின் இறைமை ஆகியன

(7 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை, சாவகச்சேரி தபாலகங்களுக்கு தொலைபேசி

பருத்தித்துறை, சாவகச்சேரி தபாலகங்களுக்கு றேடியோ தொடர்பு தொலைபேசி வசதி செய்யப்படவிருக்கிறது.

இந்த வசதியை வழங்கத் தேவையான உபகரணங்கள் நேற்று முன்தினம் விமான மூலம் எடுத்து வரப்பட்டன.

இந்த தொலைபேசி வசதியை வழங்குவதற்கான வேலைகள் இன்று ஆரம்பிக்கப்பட இருப்பதாக தொலைத் தொடர்புத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வசதி செய்யப்பட்டபின் அப்பகுதி மக்கள் கொழும்பு மற்றும் இடங்களுக்கு தொலைபேசி சேவையைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்து. (இ-3)

## யாழ்ப்பாணத்துக்கு 'பக்ஸ்' வசதி!

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணத்தில் 'பக்ஸ்' சேவை நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து விமான மூலம் எடுத்து வரப்பட்ட 'பக்ஸ்' கருவி யாழ்ப்பாணத்தில் பொருத்தப்பட்டு அச்சேவைஉத்தியோக பூர்வமாக நேற்று அங்குரார்ப்பணம் செய்யட்பட்டது.

இந்தக் கருவி மூலம் செய்திகளை அனுப்ப விரும்பும் அரச திணைக்களங்கள் மற்றும் பொதுமக்கள் தமது தகவல்களை வேம்படி வீதியில் உள்ள சர்வதேச தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

512 பிரிகேட் அதிகாரியின் சிபார்சுடன் தகவல் அனுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — மாலை 5.30 மணிக்குப் பின்னர் வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தகவல் அனுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது

வடக்கு மீள்குடியமர்வு நிவாரண அதிகாரசபையின் ஏற்பாட்டில் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. (உ-3)

## பயணிகள் கப்பல்கள் இனி குருநகர் இறங்குதுறைக்கு?

யாழ்ப்பாணம், ஏப். 2

திருகோணமலைக்கும் திருகோணமலையிலிருந்தும் கப்பலில் பயணம் செய்வோரை காங்கேசன்துறைக்குப் பதிலாக குருநகர் இறங்கு துறையில் ஏற்றி இறக்குவது தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டுவருகின்றது.

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் இத்தகவலை வெளியிட்டார்.

தற்சமயம் காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக மேற்கொள்ளப்படும் கப்பல் சேவையில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதை அடுத்து இந்த மாற்றம் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனை தொடர்பாக —

வடமாகாண மீள் குடியமர்வு, நிவராண அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர, யாழ். அரச அதிபர் உட்பட செயலக அதிகாரிகள் குருநகர் இறங்கு துறையைப் பார்வையிட்டனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடன் ஆராய்து விசேட திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

குருநகர் இறக்கு துறையை புனர்நிர்மாணம் செய்வது மற்றும் நடைமுறைகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த விசேட திட்டநகலை சோமபால குணதீர நேற்று கொழும்பு திரும்பிய போது தம்முடன் எடுத்துச் சென்றுள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் நேற்று குண்டுத் தாக்குதல்

நேற்றுக்காலை 8.45 மணியளவில் செங்கலடிப்பகுதியில் ஏறாவூர் பொலிஸ் காவல் நிலையத்தில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்தில் நேரம் குறித்து வைக்கப்பட்டகுண்டு ஒன்று வெடித்ததாக 'உதயன்' மட்டக்களப்புச் செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இச்சம்பவத்தில் பொலீஸார் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார். அங்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில்அகப்பட்டு ஒரு தாயும் மகனும் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்.

கிளைமோர் கண்ணித் தாக்குதலே இங்கு நடத்தப்பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-21-3)

## காரைநகர் தளம் உஷார் நிலையில்!

கொழும்பு, ஏப். 2

காரைநகர் கடற்படைத் தளத்தில் கடற்படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

காரைநகர்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீவிரவாதி ஒருவர் கடற்படையினர் மீது நடத்திய தாக்குதலை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கோவளம் பகுதியில் கடற்படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடத்திய சமயம் கடற்படை அதிகாரி மீது இளைஞர் ஒருவர் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளார்.

கடற்படையினரைப் பிரதான இலக்காக வைத்துத் தாக்குதல் நடத்தத் தெரிவு செய்யப்பட்ட குழுவின் உறுப்பினராக இந்த இளைஞர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 90 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு வீரவில புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 87 தமிழ் இளைஞர்களும் —

கங்கொடவில பெண்கள் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ்ப் பெண்களும் —

விடுவிக்கப்பட்டுள்ளனர் என இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் கலாநிதி ஆர். எம். எவ். இரத்தினாயக்கா தெரிவித்தார்.

இவர்களை விமானமூலமாக அல்லது கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (உ-3)

## மேலும் 2 சடலங்கள் நாகபட்டினம் கடலில்!

### இலங்கைப் படையினருடையனவா?

கொழும்பு, ஏப். 2

நாகபட்டினம் கடற்பகுதியில் இருந்து மேலும் இரு இலங்கை விமானப்படையினரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விமானப்படை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே அப்பகுதியில் கைப்பற்றப்பட்ட விமானப் படை அதிகாரியின் சடலத்தையும், இவ்விரு சடலங்களையும் கொழும்புக்கு கொண்டு வருவது தொடர்பாக முயற்சிகள் நடைபெறுவதாகவும் —

(7 ஆம் பக்கம் பார்க்க)

## 'அன்ரனோவ்' விமான விபத்துக்கு விமானியின் தவறே காரணமாம்!

கொழும்பு, ஏப். 2

கடந்த சனிக்கிழமை இரத்மலான விமான நிலையத்தில் ஏற்பட்ட 'அன்ரனோவ்' விமான விபத்துக்கு அந்த விமானத்தைச் செலுத்திய விமானிகளின் கவனக்குறைவே காரணம் என்று விமானப்படையைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானம் தரையிறங்கிய சமயம் அதன் ரயர் திடீரென காற்றுப் போனதால் இந்த விபத்து ஏற்பட்டது என முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

விபத்துக்குக் காரணம் தொழில் நுட்பக் கோளாறு

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் பங்குத் தந்தை

## S. H. ஜெபநேசன் அடிகளார்

அவர்களுக்கு

அன்பால் அறிவால் அடக்கத்தால் மென்மொழியால்
அமைதியால் துறவியாய் உருவான ஜெபநேசா
என்புரியராகி ஏழைகளோ டிணைந்தவனே
இளைஞரெம் வாழ்வில் ஒளியாய் இருந்தவனே
பொன்னான வரலாறே பூமுகத்திற் பொறித்தவனே
புனிதமரிப் பெருங்கோவிற் புரவலனே கண்ணீரால்
உன்பாத மலரிணையைக் கழுவி உருகுகிறோம்
உன்னதத்தில் முகமுகமாய் ஒருநாள்நாம்
சந்திப்போம்.

**மேய்ப்புப் பணிச்சபை,**
**உறுப்பினரும், பங்குமக்களும்.**
**யாழ். மரியன்னை பேராலயம்.**

★ 2-4-97 புதன்கிழமை 5.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் பங்குகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

(46120)

# கண்ணீர் அஞ்சலி

## அனா கொன்சன்ரைன் (மணி)

திருமலையைப் பிறப்பிடமாகவும், மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட 'மம்மி' என அன்பாக அழைக்கப்பட்ட அனா கொன்சன்ரைன் 29 - 03 - 97 சனியன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தொட்டப்பு, மேரிப்பிள்ளையின் மருமகளும், ராஜரெட்ணத்தின் அன்பு மனைவியும், றோஸ்மலர், பிலோமினா, யேசுதாசன் ஆகியோரின் மைத்துனியும், கிறிஸ்ரி செல்வநாயகம், அன்ரனி, பவா, ஆனந்தன் (U.K), ராஜன் (U.K), இந்திரா, இன்பன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புஸ்பராணி, பபி, இரட்ணசிங்கம் ஆனந்தி (U.K), யசோ (U.K), கிருபா, ரமணி ஆகியோரின் அனபு மாமியாருமாவார்.

அவரது மரணச் சடங்கில் பங்கு பற்றிய அனைவரும், எங்களால் அறிவிக்க தவறிய அனைவரும் அவரின் ஆத்மா சாந்திக்காக மன்றாடவும்.

இ. கிறிஸ்ரி செல்வநாயகம்
(மகன்)

(சி/410)

# இதய அஞ்சலி

## அருட்திரு கில்லறி ஜெபநேசன்

முன்னாள் போராலய பங்குத்தந்தையும், மனித முன்னேற்ற நடுநிலை இயக்குநருமான அருட்திரு கில்லறி ஜெபநேசன் அடிகளாரின் மறைவையொட்டி எமது கழகத்தின் இதய பூர்வமான அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.


அன்னார் எமது கழகத்துக்கும் எமது மக்களுக்கும் வழிகாட்டியாய் நின்று செய்த அளப்பெரும் உதவிகள் என்றும் எம்மனதில் நிலைத்திருக்கும்.

**நிர்வாகிகளும்,**
**அங்கத்தவர்களும்,**
**கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழகம்.**

மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(46116)

# 31 ஆம் நீங்காத நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 08 — 1934

மறைவு: 03 — 03 — 1997

அமரர்

## கணபதிப்பிள்ளை துரைசிங்கம்

அன்பாய் பண்பாய் பாசமாக
வளர்த்த எங்கள் தந்தையே!
தாங்கள் மறைந்தாலும் எங்கள்
இதயங்களில் எப்போதும் வாழும்
தந்தையே!

உங்கள் பிரிவால் துயருறும்:

**மனைவி, பிள்ளைகள், மருமகள் தயாநிதி,**
**மருமகன் சுதா, பேர்த்தி லாவண்யா.**

பாடசாலை வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(46119)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விவசாயபீட மாணவர்களுக்கான**

# அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள விவசாயபீட மாணவர்கள் தயவு செய்து 1997-04-04 திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் காரியாலயத்தில் சமுகம் தரவும்.

**பதிவாளர்.**
1997 - 04 - 01.

(கி/409)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் சற்குணானந்தசோதி

(இளைப்பாறிய தபாலதிபர்)

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் ஸ்ரேசன் றோட்டை வதிவிடமாகக் கொண்டவருமாகிய வல்லிபுரம் சற்குணானந்தசோதி 01-04-1997 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபாலதிபர் வல்லிபுரம் —மோகனரத்தினம் தம்பதிகளின் பாசமிகு ஏக புத்திரனும், சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மயூரனன் (மாணவன் யா/ இந்துக் கல்லூரி A/L 1996), யாழினி (மாணவி யா/ வேம்படி மகளிர் கல்லூரி A/L 1998), ஜெயந்தினி (மாணவி யா/ வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 10) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02-04-97) இல்லத்தையில் 1.00 மணிக்கு தகனம் செய்யப்படும். வதிவிடத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெ. சண்முகரத்தினராசா
(சகோதரர்)

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில். (46122)

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாணத்திணைக்களம் - யாழ்ப்பாணம்

### மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகம் அமைத்தல் - கட்டம் 1 கோப்பாய் வைத்தியசாலை

மேற்படி வேலைக்கான கேள்விகள் யாழ். அரசாங்க அதிபரினால் 1997 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆம் திகதி முற்பகல் 10. 30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**கேள்வி வைப்புப் பணம்:-**

மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணயாக ரூபா 500/- ஐயும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 11,000/- ஐயும் யாழ்ப்பாணம், றக்கா வீதியிலமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

ரூபா பதினைந்து லட்சத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ஐசீரீஏடீ) நிர்மாண வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்து, தகுதியுடையோர் கேள்விவைப்புப் பணங்களைச் செலுத்தி கேள்விப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து, அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும்.

கேள்விப் பத்திரங்களை 1997 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செ. பத்மநாதன்,
அரசாங்க அதிபர்.

கச்சேரி, யாழ்ப்பாணம். (சி/406)

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாணத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

கீழ்காணும் வேலைக்கான கேள்விகள் கடற்கரைவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிர்மாணதிணைக்கள பிரதம பொறியியலாளரினால் **1997** ஆம் ஆண்டு சித்திரை மாதம் **17** ஆம் திகதி முற்பகல் **10. 30** மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | தேவைப்படும் ஆகக்கூடிய ஐசீரிஏடி பதிவுத் தொகை |
|---|---|---|---|
| 1. 24 படுக்கை அறைகளைக் கொண்ட விடுதி அமைத்தல் கட்டம் 1 அச்சுவேலி வைத்தியசாலை | 9,100/- | 500/- | 10 லட்சம் |
| 2. அவசர திருத்தவேலை கொக்குவில் வைத்தியசாலை | 1,300/- | 250/- | 3 லட்சம் |
| 3. திருத்தவேலை தள வைத்தியசாலை, பருத்தித்துறை | 4,600/- | 250/- | 5 லட்சம் |
| 4. அவசர திருத்த வேலை சங்கானை வைத்தியசாலை | 4,600/- | 250/- | 5 லட்சம் |
| 5. அரை நிரந்தர கட்டடத்தினை பிரசவவிடுதியாக மாற்றி அமைத்தலும் அதற்கு மலசல கூடம் அமைத்தலும் பளை வைத்தியசாலை | 4,600/- | 250/- | 5 லட்சம் |
| 6. விசேட திருத்தவேலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சுற்றி சுற்று மதில் கட்டுதல் மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி | 4,400/- | 250/- | 5 லட்சம் |
| 7. விசேட திருத்தவேலை மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி | 7,400/- | 500/- | 10 லட்சம் |

றக்கா வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து தகுதியுடையோர் கேள்வி வைப்புப் பணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும்.

கேள்விப்பத்திரங்களை 1997 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி 12 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ந. சுந்தரமூர்த்தி
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

நிர்மாணத்திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (கி/407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசு அமைக்க ஐ. முன்னணியின் ஆதரவைக் கோருகின்றது காங்கிரஸ்!

புதுடில்லி, ஏப். 2

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரி ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"மிதவாதக் கட்சிகள் ஆட்சி அமைப்பதைத் தடுக்க கடந்த 10 மாதங்கள் உங்களுக்கு நாங்கள் ஆதரவு தந்தோம். இப்போது எங்களுக்கு ஆதரவு தரவேண்டியது உங்களது முறை'' என சீதாராம் கேசரி தெரிவித்துள்ளார்.

அதே நேரம் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கொள்கையற்ற ஏற்பாடுகளும் சமரசங்களும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் தெரிவித்துள்ளார்.

அரசு அமைக்கும் வாய்ப்புக்களை அக்கறையுடன் ஆராய்வோம் என முன்னர் கூறிய பாரதீய ஜனதாக் கட்சி தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை நடத்த வேண்டுமென குடியரசுத் தலைவரை பாரதீய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது:

அதே சமயம் இனியும் காலம் தாழ்த்த முடியாது; விளையாட்டைத் தொடர வேண்டும் என்ற கட்டாயம் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரிக்கு ஏற்பட்டுள்ளது என்றும் —

என்ன நடக்கும் என்ற நிச்சயமற்ற நிலையில் சீதாராம் கேசரி பகடைக் காய்களை உருட்டி விட்டுள்ளார் என்றும் —

இதன் மூலம் எந்தக் கட்சியையும் விட பாரதீய ஜனதாக் கட்சிக்கே அதிக லாபம் கிடைக்கும் எனவும் — ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட மாற்றங்களே சீதாராம் கேசரி இத்தகைய முடிவை மேற்கொள்ளக் காரணமாக அமைந்தது என்று நம்பப்படுகிறது. [இ-10]

## இஸ்ரேலுடனான உறவைதுண்டிக்க தீர்மானம்

கெய்ரோ, ஏப், 2

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கூடிய 22 அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் இஸ்ரேலுடனான அனைத்து உறவுகளையும் நிறுத்திவிட அரபு நாடுகளுக்குப் பரிந்துரைத்துள்ளது.

இது குறித்து ஆத்திரம் வெளியிட்டுள்ள இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு, இஸ்ரேலுக்கு எதிராக அரபு நாடுகள் அணி வகுக்கின்றன எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

(இ-10)

## உலக அரங்கில்

### ஆர்வம் குன்றிய நிலையில்

## இந்திய - பாகிஸ்தான் 4 நாள் பேச்சு முடிவு

புதுடில்லி, ஏப். 2

இந்திய - பாகிஸ்தான் நாடுகளின் வெளியுறவுச் செயலர்களின் 4 நாள் பேச்சுவார்த்தை கடந்த திங்களன்று முடிவடைந்தது.

இந்தியாவில் ஏற்பட்ட திடீர் அரசியல் திருப்பம் காரணமாக பேச்சுவார்த்தை தொடங்கிய போது இருந்த ஆர்வம் தொடர்ந்து இருக்கவில்லை.

எனினும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும்—

விரைவில் இந்திய வெளியுறவுச் செயலர் சல்மான் ஹைதர் பேச்சுவார்த்தைகளுக்காக பாகிஸ்தான் செல்வார் எனவும் வெளியுறவுச் செயலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-10)

## ஸயரில் மற்றும் ஒரு நகரம் போராளிகளிடம் வீழ்ச்சி

ஸயர் நாட்டுப் போராளிகள் கமீனா என்ற கேந்திர முக்கியத்துவம் மிக்க நகரைக் கைப்பற்றி முன்னேறியுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுப் படைகள் காலதாமதமின்றிச் சரணடைய வேண்டும் எனப் போராளிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மொபுட்டு அரசுக்கும் போராளிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜொகனர்ஸ்பேர்க் நகரில் தொடக்க தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். (இ-10)

### அமைதிப் படை

தெரானா, ஏப். 2

அல்பேனிய நாட்டுக்குஇந்த வார இறுதிக்குள் சர்வதேச அமைதிப்படை சென்றடையும் என ஐ.நா. சபையின் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ—10)

## பாகிஸ்தானில் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்படும்

### நவாஸ் ஷெரீப்புக்கு பெனாஸிரும் ஆதரவு

பாகிஸ்தானில் மக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றத்தையும் அரசையும் விரும்பிய நேரத்தில் கலைத்துவிடும் சிறப்பு அதிகாரத்தினை பாகிஸ்தான் அரசியல் சட்டம் ஜனாதிபதிக்கு அளித்துள்ளது.

இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்த கால வரலாற்றில் தொடர்ந்து 4 அரசுகளை ஜனாதிபதிகள் கலைத்துள்ளனர்.

அதிபரின் இந்தச் சிறப்பு அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தானின் தற்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் அரசு முடிவு செய்திருக்கிறது.

இதற்கான சட்டத்திருத்தத்தினை நாடாளுமன்றத்தில் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத் திருத்தத்துக்கு முழு ஆதரவு அளிப்பதாக முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ வாக்குறுதியளித்துள்ளார். (இ-10)

## அரபாத்தின் வாகனம் மீது டாக்காவில் தேங்காய் வீச்சு!

டாக்கா, ஏப். 2

பங்களாதேஷ் விஜயத்தை முடித்துக் கொண்டு டாக்கா விமான நிலையம் நோக்கி வந்த பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் வாகனம் தேங்காய் வீச்சுக்கு உள்ளானது.

முன்னாள் பிரதமர் கலீதா ஷியாவின் கட்சியினரே தேங்காயை வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து உயர்மட்ட விசாரணை நடத்த பிரதமர் ஷேக் ஹஸீனா உத்தரவிட்டுள்ளார்.

(இ-10)

## 3 தொலைக்கல்வி நிலையங்களிலும் ஆசிரியருக்கான மேலதிக பயிற்சி

பருத்தித்துறை, ஏப். 2

யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று தொலைக்கல்வி நிலையங்களிலும் ஆசிரியர்களுக்கான மேலதிக பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்தினால் முதலில் ஐந்து வருட சேவை நிரம்பிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆரம்ப வகுப்புகளில் கணிதம் கற்பித்தல், ஆண்டு 6, 7, 8 வகுப்புகளில் உடற்கல்வி கற்பித்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப்பயிற்சி வகுப்புகள் யாவும் இலவசமாகவே வழங்கப்படும்.

'சீடா' நிறுவனத்தினால் அச்சடிக்கப்பட்ட 'மொடியூல்'களை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் ஆசிரிய சேவையில் பதவி உயர்வதற்கு அரசினால் கோரப்பட்ட 300 மணி நேர சேவைக் காலப் பயிற்சி வகுப்புகளை வார இறுதி நாள்களிலும் விடுமுறைக் காலங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் செயலமர்வுகளையும் கற்பித்தல் மதிப்பீடுகளையும் ஒப்படைகளையும் மேற்பார்வை செய்வதற்கு மேலதிக தொலைக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

தற்போது பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் இருந்து தேசிய கல்வி நிறுவனம் நேரடியாக ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்யும். இரண்டு ஆண்டு காலத்துக்கு பாடசாலையில் இருந்து இந்த ஆசிரியர்கள் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இந்த ஆலோசகர்கள் பாடசாலைகளுக்குச் சென்று மதிப்பீடு செய்வதற்கும் ஒப்படைகளை மதிப்பீடு செய்வதற்கும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இன்று ஆசிரிய சேவையிலுள்ள 1 இலட்சத்து 75ஆயிரம் ஆசிரியர்களுக்கும் இவ்வருட முடிவுக்குள் மீள் பயிற்சி வழங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ். மாவட்டத்தில் வடமராட்சி, வலிகாமம் கிழக்கு, யாழ்ப்பாணம் ஆகிய தொலைக் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் மேலதிகப் பயிற்சி பெறுவதற்கான ஒழுங்குகளை யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சகல பாடசாலை அதிபர்களும் தத்தமது கோட்டங்களில் இப்பயிற்சிக்கான படிவங்களைப் பெற்று இம் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக தொலைக் கல்வி நிலையங்களுக்கூடாக தேசிய கல்வி நிறுவனத்துக்கு அனுப் [illegible] கல்விப் பணிப்பாளர் சு.இரத்தினராசா அறிவித்துள்ளார்.

(இ-118)

## தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணத்திலும் செயற்படும்

தனது அரசியல் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆராய்ந்து வருவதாக அக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

"எமது கட்சியின் கிளை ஒன்று உடனடியாக யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுமா என்பது குறித்து என்னால் திட்டவட்டமான பதில் ஒன்றை இப்போது தரமுடியாது. ஆனால் விரைவில் எமது கட்சியின் அரசியல் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்துக்கும் முழு அளவில் விஸ்தரிக்கப்படும் என்று மட்டும் என்னால் கூற முடியும்'' — என்று மேலும் கூறினார் அந்தத் தலைவர்.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தமது அலுவலகங்களைத் திறந்து அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுவருவது தெரிந்ததே. (உ)

## வவுனியாவில் 1 வாரமே தங்குவதற்கு அனுமதி

வவுனியா, ஏப். 2

வவுனியா நகருக்குள் ஈரற் பெரிய குளம், தாண்டிக் குளம் ஆகியவை வழியாகவும் மற்றும் ரயில் மூலமும் வருவோருக்கு வவுனியாவில் ஒருவார காலம் தங்குவதற்கான 'பாஸ்' மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த 'பாஸ்' எக்காரணம் கொண்டும் ஒருவார காலத்துக்குமேல் நீடிக்கப்படுவதில்லை என்றும் —

கடந்த செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் வவுனியாவுக்குள் வந்தவர்களுக்கு மட்டுமே ஒருவாரகால 'பாஸ்' புதுப்பிக்கப்படுவதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டுப்பாடு காரணமாக வவுனியாவுக்கு தற்போது வருபவர்கள் ஏழு நாள்களுக்குள் திரும்பிச் சென்றுவிட வேண்டிய கட்டாய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## கரவெட்டி மொந்தன் வாய்க்கால் புனரமைப்பு பூர்த்தியடைகிறது

அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலயத்தின் ஆதரவுடன் கரவெட்டி மொந்தன் வாய்க்கால் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் புனரமைக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளது.

இப் புனரமைப்புப் பணிக்கென அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயம் 6 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதனால் இவ் வாய்க்கால் புனரமைப்புப் பணி கடந்த மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிமெந்து கொங்கிறீட்டினால் இருபக்கமும் அணை கட்டப்பட்டுள்ள இவ்வாய்க்கால், கரவெட்டி நுணுவில் வயல் குளத்திலிருந்து ஆரம்பமாகி துன்னாலை தெற்கின் ஊடாக கரவெட்டி தல்லையப்புலத்தில் வயல்களுக்கிடையில் சோனப்புவில் முடிவடைகிறது.

வாய்க்கால் புனரமைப்புக்கு நிதி போதாமையினால் கரவெட்டி துன்னாலைப் பகுதி விவசாயிகள், இளைஞர் கழகங்கள் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

இச் சிரமதானப் பணியின் தொடராக கடந்த ஞாயிற்றுக் கிழமை கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கம் சிரமதானப் பணியினை மேற்கொண்டது.

இம் மாதத்தில் இப் புனரமைப்புப்பணி முடிவடையும். இவ்வாய்க்கால் புனரமைக்கப்படுவதால் விவசாயிகள் நன்மையடைவார்கள்.

(இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இன்றைய போராட்டத்துக்கு வழிகாட்டியவர் தந்தை செல்வா

## ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 2

''நவீன ஆயுதப் போராட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருந்த போதிலும் அக்கால அஹிம்சை வழிப் போராட்டத்தை மறந்து விட முடியாது. அஹிம்சை வழிப் போராட்டவழிவந்ததே இன்றைய இந்தப் போராட்டம் ஆகும். எமது இன்றைய போராட்டத்துக்கு வழிகாட்டியாக அமைந்த தந்தை செல்வாவை நாம் மறந்து விட முடியாது.''

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். நகரில் நடைபெற்ற தந்தை செல்வாவின் 100 ஆவது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கப் பிரமுகர் மோகன் கூறினார்.

தந்தை செல்வா எமது தமிழ்ச் சமூகத்துக்காக என்ன செய்தார் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். கொண்ட கொள்கைக்காக அவர் இறுதி மூச்சுவரை பாடுபட்டார். இன விடுதலைக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்தார். தனது சொத்துக்களை அள்ளிக் கொடுத்தார்.

நாட்டுக்காக, மக்களுக்காக அவர் ஆற்றிய சேவையை, பணியை தொடர்ந்தே எமது இன்றைய போராட்டம் நடக்கிறது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-15)

## சைவப் புலவர் சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 37ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பு வைபவமும் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் சச்சிதானந்தசிவத்தின் தலைமையில் நிகழவுள்ள இவ்விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

1995ஆம் ஆண்டு சங்கம் நடத்திய பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு இவ்விழாவில் பட்டமளித்துச் சான்றிதழ்கள் வழங்கப்படும். (இ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 2

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (ஐ-3)

# 1 லட்சம் நோயாளர்களைத் திரட்டி டாக்டர்களுக்கு எதிராக போராட்டம்

## அமைச்சர் பௌசி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 2

''வரவு இடாப்புகளில் கையொப்பம் வைக்க வைத்தியர்கள் தொடர்ந்து மறுத்து வந்தால் ஒருலட்சம் நோயாளர்களைத் திரட்டி நாடு தழுவிய போராட்டம் ஒன்றை நடத்துவேன்.''

சுகாதார அமைச்சர் எம். எச். எம். பௌசி மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

வரவு இடாப்பில் கையொப்பம் இட வேண்டும் என்று விடுக்கப்பட்ட உத்தரவை வைத்தியர்கள் புறக்கணித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையில் தமக்குச் சாதகமான நிலை ஏற்படாத பட்சத்தில் அமைச்சர் பதவியில் இருந்து செப்ரெம்பர் மாதம் விலகப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3-150)

## முல்லைத்தீவுக் காடுகளில்

# புலிகளின் 'பங்கரை' கண்டுபிடித்து தாக்குவதில் விமானப்படை சிரமம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகள் தமது பங்கர்களைக் காடுகளுக்குள் அமைத்துள்ளதால் விமானப்படையினருக்கு அவர்களது 'பங்கர்' களைக் கண்டுபிடித்து அவற்றின் மீது தாக்குதல் நடத்துவது கஷ்டமானதாக உள்ளது.

மேற்கண்டவாறு புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக ''சண்டே லீடர்'' செய்தி வெளியிட்டுள்ளது.

தரைவழியாகச் சென்று புலிகளின் நிலைகளைத் தாக்குவதில் கஷ்டம் உள்ளதால் விமானப்படை மூலம் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டதாகவும் —

விமானங்கள் தாழப்பறந்து தாக்குதல் நடத்தினால் புலிகளின் பதில் தாக்குதலுக்கு இலக்காக நேரிடும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# குடாநாட்டின் சில பகுதிகளில் மக்கள் வங்கியின் கரும பீடங்கள்

பருத்தித்துறை, புத்தூர், சங்கானை ஆகிய இடங்களில் தனது கருமபீடங்களை திறப்பதற்கு மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தப்பகுதிகளில் நிரந்தரக்கிளைகளை உடனடியாக அமைக்கும் சாத்தியம் இல்லாத காரணத்தால் கரும பீடங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப்பகுதிக்கு அண்மையில் உள்ள நிரந்தர கிளையின் கருமபீடமாக அவை இயங்கும்.

பொதுமக்கள் தமக்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள வசதியாகவே இந்தக் கருமபீடங்கள் இயங்க இருப்பதாக வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## மத்திய கல்லூரி பற்சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். மத்தியகல்லூரியில் பற்சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு வழங்கிய நிதியிலிருந்து 1 லட்சத்து 68 ஆயிரம் ரூபா செலவில் பற்சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (இ-173)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

வலய மட்ட உடற்பயிற்சி இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையின் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவினர் முதலாவது இடத்தை பெற்றதை ஒட்டிய பாராட்டு விழா இன்று புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ்விழா பாடசாலை அதிபர் எஸ். ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கலந்து கொள்வார். (இ-5)

# வானொலி கருவிக்கு அனுமதி கிடையாவிடில் 'மேர்லின்' தனது பணியை நிறுத்த நேரிடும்

## இவ்வாரம் முடிவு செய்யப்படும் என்கிறார் அதன் கொழும்புப் பிரதிநிதி

யாழ்ப்பாணத்தில் மருத்துவப்பணியில் ஈடுபடுமாறு அரசே முதலில் கோரிக்கை விடுத்தது. பின்னர் அந்த பணியை மேற்கொள்வதற்கு அத்தியாவசிய தேவையான வானொலித் தொலைத் தொடர்புக் கருவியைப் பயன்படுத்த அரசு அனுமதி மறுத்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதா? அல்லது இல்லையா? என்பது குறித்து ''மேர்லின்'' இவ்வாரம்முடிவு செய்யும்.

யாழ்ப்பாணத்தில் ''மேர்லின்'' தனது பணியைத் தொடங்கமுடியாததுகுறித்து வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''மேர்லின்'' நிறுவனத்தின் வேலைத் திட்டங்கள் என்ன?

யாழ்ப்பாணத்தில் இந்நிறுவனம் என்னென்ன வேலைத் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது?

இந்த வேலைத் திட்டங்கள் எப்போது ஆரம்பிக்கப்படப் போகின்றன?

இவ்வாறான விடயங்கள் குறித்து பலரும் வினாவுகிறார்கள்.

''மேர்லின்'' என்பது அரச சார்பற்ற பிரிட்டிஷ் மருத்துவ நிறுவனம் ஆகும். யாழ். போதனா வைத்திய சாலைக்கு மருத்துவர்களையும் தாதிமார்களையும் தந்துதவுமாறு 16-01-1996 இல் சுகாதார அமைச்சு இந்த நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளில் மருத்துவ ஊழியர்களைப் பணியில் அமர்த்தவும் பூர்வாங்க மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் ஜனாதிபதி செயலணிக்குழு மேர்லினுக்கு 16-04-96 இல் அனுமதி வழங்கியது.

மேர்லின், நிறுவனத்தின் உதவியைக்கோரி யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கான அனுமதியை பின்னர் சிறிலங்கா வழங்கியிருந்த போதிலும் கோரப்பட்ட உதவிகளை வழங்கும் பொருட்டு மேர்லின் நிறுவனம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் உடனடியாகப் பயனளிக்கவில்லை.

இதனால் அப்போது கொழும்பில் வந்து தங்கியிருந்த மருத்துவ ஊழியர்கள் பிரிட்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

### ஜோன்பைகேற் யாழ். விஜயம்

1996 நவம்பரில் 'மேர்லின்' நிறுவனத்தின் இங்கிலாந்துப் பிரதிநிதி ஜோன் பைகேற் பொதுவான நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

யாழ். போதனா வைத்திய சாலை, யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ வளாகம் ஆகியனவும் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் ஆகியோரும் அவரிடம் உதவி கோரியிருந்தனர். அந்த வேண்டுகோளுடன் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பினார்.

அதேநேரம் அரசாங்க அமைச்சர்களும் அதிகாரிகளும் யாழ்ப்பாணத்துக்கு வைத்திய நிபுணர்களை வழங்குமாறு மீண்டும் 'மேர்லின்' நிறுவனத்துக்குக் கோரிக்கை விடுத்தனர்.

சுகாதார அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் மருத்துவர்களை யாழ். குடாநாட்டில் பணியில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை 'மேர்லின் நிறுவனத்துக்கு பாதுகாப்பு அமைச்சு 1996 நவம்பரில் வழங்கியது.

உதவிகளுக்கான கோரிக்கைகள் பரிசீலனைக்காக பிரிட்டனிலுள்ள ''மேர்லின்'' நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதை அடுத்து 'மேர்லின்' நிறுவனத்தின் ஸ்தாபகரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான டாக்டர் கிறிஸ் பெவ்ஸி அவர்களால் மருத்துவ உதவி பற்றிய மதிப்பீடு 1997 ஜனவரியில் மேற்கொள்ளப்பட்டது.

கோரப்பட்ட உதவிகளின் அடிப்படையில் உத்தேசத் திட்ட விவரங்களும் செலவின அறிக்கையும் 17.2.1997 அன்று சிறிலங்கா அரசிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்களுக்கு போதிப்பதற்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக்குகளை நடத்துவதற்கும் சத்திர சிகிச்சை நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர், தாய்மை மருத்துவ நிபுணர் ஆகியோரை ஈடுபடுத்துவது என 'மேர்லின்' நிறுவனத்தின் உத்தேச திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பயிற்சிகளை வழங்கவும் —

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளரின் நெறிப்படுத்தலின் கீழ் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் —

பொது சௌக்கிய மருத்துவர் ஒருவரையும் பொது சௌக்கிய தாதி ஒருவரையும் ஈடுபடுத்த 'மேர்லின்' நிறுவனம் உத்தேசித்திருந்தது.

சிறிலங்கா அரசின் உதவிக் கோரிக்கைகளைப் பிரதிபலிப்பனவாக இந்த உத்தேசத் திட்டம் அமைந்து அரசாங்கத்தினால் இத்திட்டம் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான வானொலித் தொடர்பு சேவை மற்றும் வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகிய 'மேர்லின்' நிறுவனத்தின் கோரிக்கைகள் பாதுகாப்பு அமைச்சினால் நிராகரிக்கப்பட்டன.

''எந்தவொரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாவது யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வருவதாயின் அதற்கு போதுமான அளவு தொலைத்தொடர்பு வசதிகள் தேவை. வழமையான தொலைத் தொடர்பு வசதிகளும் சேவைகளும் இல்லாத சூழ்நிலையில் தொலைபேசி வசதி, 'வாக்ஸ்' வசதி மற்றும் வானொலித் தொடர்பு வசதிகள்இன்றியமையாதவை 'மேர்லின்' நிறுவனத்துக்காக நான் கோரியது போன்ற வானொலித் தொடர்பு வசதிகளை யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் ஏனைய ஆறு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் கொண்டுள்ளன. எனவே எனது கோரிக்கையைப் பாதுகாப்பு அமைச்சு மீள் பரிசீலனை செய்யும் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' என அரசாங்கத்தின் முடிவு குறித்து மேர்லினின் கொழும்புப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

''ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் சிறிலங்கா அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்து இந்த விடயத்தை மேலும் கவனத்தில் எடுக்குமாறு கோரவுள்ளேன்.

வானொலித் தொடர்பு வசதிகளை அமைக்க அனுமதி வழங்க அதிகாரிகள் மறுக்கும் பட்சத்தில் மருத்துவ நிபுணர்களை வழங்கி உதவுதல் மற்றும் யாழ். குடாநாட்டில் உதவிகளை வழங்குதல் ஆகியன தொடர்பாக சிறிலங்கா அரசின் கோரிக்கைக்குச் சாதகமாக பதிலளிப்பதா, இல்லையா? என்பது பற்றி மேர்லின் நிறுவனம் மீள்பரிசீலனை செய்ய நேரிடும்'' என்றும் பைகேற் தெரிவித்தார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மலையக மக்கள் தலைவர் தொண்டமான் அல்லர்!

## தேர்தல் முடிவு நிரூபித்துவிட்டது என்கிறார் செல்லச்சாமி

கொழும்பு, ஏப். 2

''இ. தொ. கா. தலைவர் தொண்டமான் மலையக மக்களின் தலைவர் அல்லர் என்பதை உள்ளூராட்சித்தேர்தல் முடிவுகள் நிரூபித்து விட்டன''.

இப்படி தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

மலையக மக்கள் தமக்கு புதிய தலைமைத்துவம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து தேர்தலில் தமது தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

எமது கட்சி ஐ. தே. க. ஆதரவுடன் 25 பிரதேச சபைஇடங்களுக்குப் போட்டியிட்டது, அதில் 20 இடங்களில் வெற்றி கிடைத்தது.

இ. தொ. கா. பெற்ற மொத்த வாக்குகளான 50 ஆயிரம் வாக்குகளில் 30 ஆயிரம் வாக்குகள் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் வாக்குகள் ஆகும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

## தோல்வியை ஏற்பதாக தொண்டா தெரிவிப்பு

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினருக்கு வாக்களித்து தமது தலைமைப்பீடத்துக்கு தோல்வியை ஏற்படுத்தியதை தாம் ஏற்றுக் கொள்வதாக இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் இந்தத் தேர்தல் மூலம் தனக்கு விடுத்துள்ள அறிவிப்பைத் தான் திருப்தியுடன் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் மிகப்பெரிய தொழிற்சங்க அமைப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புனரமைக்கப்பட வேண்டும் என்பதை இந்தத் தோல்வி எடுத்துக் காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். (இ-10)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

## அதிகரித்த ஓய்வூதியப் படிவங்கள் தயாரிப்பதில் கால தாமதம்

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியம் வழங்குவதற்குரிய படிவங்களைத் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்படலாம் என்பதால் ஓய்வூதியர்களுக்கு இரு தொகுதிகளாக ஓய்வூதியம் வழங்க பிரதேசசெயலக ஓய்வூதியப் பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மே மாதம் ஒரு தொகுதியினருக்கும் ஜூன் மாதம் மிகுதித் தொகுதியினருக்கும் அதிகரித்த ஓய்வூதியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆயிரத்து 800 க்கு மேற்பட்ட ஓய்வூதியர்கள் அதிகரித்த ஓய்வூதியம் பெற உள்ளனர். (இ-117)

## புளொட் கோரிக்கை

கொழும்பு, ஏப். 2

இலங்கையின் தேசிய நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் தங்களது முழுமையான பங்களிப்பை நாம் எதிர்பார்க்கிறோம்.

— தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் (புளொட்) பிரதித் தலைவர் என். மாணிக்கதாஸன் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யஸீர் அரபாத்துக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ)

## தமிழ்ப் பெண் டாக்டர் மீது 'இன்ரர்போல்' விசாரணை

கொழும்பு, ஏப். 2

பிரதிப் பொலீஸ் மா அதிபர் மித்ரா ஆரியசிங்கவின் சீருடையைக் கடத்தியமை தொடர்பாக தற்சமயம் சிக்காக்கோவில் உள்ள தமிழ்ப் பெண் டாக்டர் 'இன்ரபோல்' பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

சிக்காக்கோவில் தங்கியுள்ள அந்தப் பெண் டாக்டரின் வாக்குமூலத்தைப் பெறுமாறு சி.ஐ.டி. பொலீஸார் விடுத்த கோரிக்கையையடுத்து இன்ரபோல் பொலீஸார் அவரை விசாரணை செய்து வருகின்றனர்.

மித்ரா ஆரியசிங்கவின் நடத்தை குறித்து விசாரணை செய்யுமாறு பொலீஸ் மா அதிபர் சி.ஐ.டி. பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதே நேரம் — பொலீஸ் அதிகாரிகளை இரகசிய புலனாய்வு (ISC)ப் பிரிவே விசாரணை செய்ய முடியும் என்றும் —

சி.ஐ.டி.யினர் விசாரணை செய்ய முடியாது என்றும் — பொலீஸார் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ளது. (3-150)

## வன்னியிலிருந்து வந்தோருக்கு அனுபவம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டைத் துப்புரவு செய்தவர்கள் அடுத்த நாள் காலை குடியிருப்பதற்கான ஆயத்தங்களுடன் சென்ற சமயம் ரூபா 10 ஆயிரம் பெறுமதியான வீட்டுக் கதவுகள் இரவோடிரவாகக் களவாடப்பட்டிருந்தன.

இச் சம்பவம் மட்டுவில் கிழக்கில் இடம் பெற்றது.

வன்னியில் இருந்து வந்தவர்களுக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

கடந்த சனிக்கிழமையே இவர்கள் வன்னியில் இருந்து வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

### பல லட்சம் ரூபா செலவில்

## மத்திய கல்லூரிக் கட்டடங்கள் திருத்தப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 2

தேசியப் பாடசாலைகளில் ஒன்றான யாழ். மத்திய கல்லூரியில் பல கட்டடங்கள் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கான நிதியை மத்திய கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

கல்லூரியின் ஆரம்பப் பிரிவு 3 லட்சம் ரூபா செலவிலும், ஏ. ஈ. தம்பர்மண்டபத்தின் ஒருபகுதி 6 லட்சம் ரூபா செலவிலும், கல்லூரியின் தென்பகுதியிலுள்ள மாடிக்கட்டடத்தின் ஒரு பகுதி 4 லட்சம் ரூபா செலவிலும் திருத்தப்பட்டுவருகின்றன.

திருத்தப்பட்டுவரும் ஆரம்ப பிரிவுக் கட்டடத்தில் இரண்டாம் தவணை முதல் வகுப்புகள் நடைபெறும்.

இக்கட்டடங்கள் யாவும் கடந்த காலங்களில் நடைபெற்ற விமான, ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்திருந்தன. (இ-173)

## வடமராட்சியில் கூ. மொ. வி. கிளை

வடமராட்சிப் பிரதேசத்தில் முதலாவது கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதோச) கிளை இன்று புதன்கிழமை பருத்தித்துறை பழைய சந்தைச் சதுக்கத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-118-173)

### வடக்கு- கிழக்கில் நடைபெறும்

## உள்ளூராட்சித் தேர்தலில் ஈ. பி. டி. பி போட்டியிடுமா?

வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டால் —

அதன் மூலம் தமிழ் மக்களுக்கு பலன் கிட்டுமானால்-

அப்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தேர்தலில் நாம் போட்டியிடுவது குறித்து முடிவு செய்வோம்.

ஈ. பி. டி. பி கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழ்க் கட்சிகள் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பதைப் பொறுத்தே தமிழ் மக்களின் வரவேற்பு அவற்றுக்குக் கிட்டும்.

யாழ். மாவட்டத்தில் படையினரால் கைதாவோர் தொடர்பான பிரச்சினைகள், வேலை வாய்ப்பின்மை, உணவு, சுகாதாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் இயன்றளவு தீர்வுகண்டு வருகிறோம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பாம்பு கடித்து மரணம்

பாம்பு கடித்து இரண்டு தினங்களின் பின் இளம் யுவதி ஒருவர் மரணமான சம்பவம் மறவன்புலோவில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த குமார் தபோதினி (வயது19) என்பவரே மரணமானவராவார்.

கடந்த வியாழக்கிழமை அவருக்கு பாம்பு கடித்ததாகவும் விஷகடி வைத்தியரிடம் [illegible] வும் சனிக்கிழமை காலை மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

விக்னா
கல்வி நிறுவனம்
96 DAY CLASSES
பொருளியல்
திரு. விக்கி
இலங்கைப் பொருளாதாரம்
ஆரம்பம்: 04 - 04 - 97
காலை 7. 30 மணி
[46109]

தேவை
முதியோர் பராமரிப்பு நிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு ஆங்கில அறிவுடைய, ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவர் தேவை. அத்துடன் சமையல் செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஊழியரும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:-
இல. 275, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.
(46090)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின்
பாரம்பரியச் சிறப்பினை
உப அதிபராய், ஆசிரியராய் பணியாற்றி
காத்து, வளர்த்து ஓய்வு பெறும்
செல்வி ச. தர்மலிங்கம்
அவர்களுக்கு
"நலமாய் ஓய்வில் சுகமே பெருகுக"

இளமை முதலாய் வேம்படி மகளிர்
வளம்பெறு கல்வி வளருயர் சாலையில்
நலம்பெறப் பயின்று நல்லா சிரியப்
பலம்பெற நின்று பணிபல புரிந்தவள்.

தன்னை முழுமையாய்த் தந்த சறோசினி
எண்ணி ஐம்பது ஆண்டுகள் நிறைவுற
வண்ண மாக வகைவகை யாக
திண்ணிய செயல்கள் சிறப்பாய்ச் செய்தவள்.

உடலின் உறுதியை ஊட்டிப் பிள்ளைகள்
திடலில் தங்கள் திறன்களைக் காட்டவும்
மடலில் வேம்படி மகத்துவம் பொறிக்கவும்
கடலாய் தனது கடமையைச் செய்தவள்.

பிறபல முயற்சியில் மாணவி யர்கள்
நிறைவுறச் சாதனை நிலைநாட் டிடவும்
கறைபடி யாது விளையாட் டுயர்வுறத்
துறையதன் தலைவியாய்த் துணையதி பராகினள்.

கால ஓட்ட உயர்வுகள் தாழ்வுகள்
சாலவும் கண்டு சளைக்கா மனத்தொடு
ஏலக் கூடிய எல்லாம் செய்து
பால மாகப் பயன்விளை வித்தவள்.

வேம்படித் தாயின் புதல்விகள் அணியில்
தாம்தலை நிமிர்ந்து தனித்துவ மாகி
உலகெலாம் பரவிய தாயின் பிள்ளைகள்
உளமெலாம் உவந்து போற்றும் சோதரி.

இவள்தன் பணிகள் என்றும் வாழும்
அவளை எல்லாம் நலமும் சூழும்
"தவமும் தவமுடை யார்க்கே" ஆதலால்
நலமாய் ஓய்வில் சுகமே பெருகுக.

அதிபர், ஆசிரியர்கள்,
துணை ஆளணியினர், மாணவிகள்.
யா/ வேம்படி
மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.
(46110)

முறைசாராக் கல்விப் பிரிவு
யா/ இணுவில் இந்துக் கல்லூரி
தொழிற்திறன் பயிற்சி (உடையமைத்தல்)
மேற்படி பயிற்சியைப் பெறவிரும்புபவர்களிடமிருந்தும் பயிற்சி அளிக்கத் தகுதியுடையவர்களிடமிருந்தும் (போதனாசிரியர்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 05-04-97க்கு முன் ஒப்படைக்கவும்.
நேர்முகப்பரீட்சை:
09 - 04 - 97 காலை 9. 00 மணிக்கு நடைபெறும்.
சு. தம்பித்துரை
(அதிபர்)
(46112)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
முறைசாராக் கல்வி
தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சி - 1997
வானொலியும், ரீ.வீ. பராமரித்தலும்
மேற்படி பயிற்சி பெற விரும்புவோர்களிடம் இருந்தும், பொருத்தமான போதனாசிரியரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி: 10-04-1997
நேர்முகப் பரீட்சை: 12-04-1997 சனிக்கிழமை
காலை 9-00 மணி
இடம்: யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பயிற்சிகள் 15-04-1997 தொடக்கம் நடைபெறும்.
- அதிபர்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
(46108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பேக்கரிக்குத் தேவையான கேக் பேப்பர்கப் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. குருபரன் 315 C, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

[46057]

புதிய பழைய ஓகன்கள், ஆர்மோனியன்கள், கிற்றார் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 23, குறொஸ் செற் வீதி, கற்பகப் பிள்ளையார் கோயிலடி, சுண்டிக்குளி, (கல்வி வலயம் 1 இன் அருகாமை).

[46082]

## ஜோதிடம்

விவாகத்தடை, பிரயாணத் தடை, கல்வித் தடை, குடும்பப் பிரச்சினை தீர, பிரிந்தவர் சேர ஆலோசனை வழங்கப்படும்; பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும், குருக்கள், பொய்யாமொழி ஜோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.

(46086)

## தேவை

பாவிக்கக்கூடியநல்ல நிலையிலுள்ள றோனியோ, தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் தேவை. பூரண விவரங்களுடன் தொடர்பு: கல்வயல் இந்து இளைஞர் மன்றம், கல்வயல், சாவகச்சேரி.

(46084)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை (ஞாயிறு 12 மணி வரை) இலவசமாகச் சுத்தம் செய்து கொடுக்கப்படும்.

(9441)

## பிரத்தியேக வகுப்புக்கள்

கணக்கியல், இந்துநாகரிகம், இந்துசமயம், நாடகமும் அரங்கியலும், பழைய/புதிய பாடத் திட்டத்துக்கமைய 97,98 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்குக் கடந்தகால வினா விடையும், மாதிரி வினா விடைகளும், குறிப்புகளும் குழுக்களாகவோ, தனியாகவோ, கற்பிக்கப்படும். தொடர்பு:- 43/1, பழம் றோட், கந்தர் மடம்.

[9453]

## வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில், பழம் றோட்டில் சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:- ந. யோகேந்திரன், நகர சபை, சாவகச்சேரி.

[சி/399]

## அக்கரைச் சீமையில்

இலங்கை, இங்கிலாந்து, நாவல் பரிசளிப்பதற்கு ஏற்றது. மலிவு விலை ரூபா 25/- நாடகம் எழுதுவது எப்படி? ஒரு நாடகமும், 22 கட்டுரைகளும் ரூபா 50/- எழுதியவர்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை.

[46104]

## தவறிவிட்டது

வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த சண்முகம் சுப்பிரமணியம் என்பவரின் ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 என விலாசமிடப்பட்ட சாரதி லைசன்ஸ் [கம்பியூட்டர்] இல:- 342757 தவறிவிட்டது. இந்தச் சாரதி லைசன்ஸைக் கண்டெடுத்தவர்கள் இ. போ. ச. பருத்தித்துறைச் சாலையில் ஒப்படைக்கவும்.

(46106)


வெளி நாட்டில் குழந்தை பிறந்ததா?

அப்படியானால் குறிப்பு கணிப்பவர்:

சுண்டுக்குளி க. யோகராசா

வானசாஸ்திரி, கணித மேதை, பொறியியலாளர்

யோகி சோதிட நிலையம்

186, கண்டி வீதி, சுண்டுக்குளி.

(46079)

நாளை முதல் விற்பனை ஆரம்பம்

பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களுக்கும், பணிமனைகளுக்குரிய காகிதாதி வகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

காந்தளகம்

41, தபாலக வீதி,
சாவகச்சேரி.

(46102)


## இதய அஞ்சலி

எமது நிறுவனத்தின்
நிர்வாகசபை உறுப்பினர்களில் ஒருவரான

**அருட்திரு. ச. ஹில்லரி ஜெபநேசன்**


அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் நாம் அவருக்கு எம் இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்தி, அவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பதிவாளர்,
அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள்.
பற்ரீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 404)

## 91 ஆம் நாள் நினைவஞ்சலி



**துரைராசா பிரதீஸ் (தீசன்)**

தோற்றம்: 03 - 02 - 1978

மறைவு: 02 - 01 - 1997

தீந்தமிழ்க் குமரனே தீசா!
தீராத வெறியோ காலனுக்கு?
கனிவாகப் பேசும் கடைக்குட்டி
கண்ணயர்ந்தனையோ திருநெல்வேலியில்?
போய் வருகிறேன் என்றாய் அன்று
போனவழி பார்த்திருக்கின்றோம் இங்கு
பத்துமணிக்கு வருவேன் என்றாய்!
பத்துமணி ஆகலையோ இன்னும்?
பால்மணம் மாறாத பாலகா!
படிப்பதற்கு பறந்து சென்றாய்!
பாதி வழியில் சிறகொடிந்தாயோ!
பத்தரை மாற்றுப் பசும் பொன்னே!
பரிதவிக்கிறோம் பாவிகள் நாம்!
நின்பாத கமலங்களுக்கு
எம் கண்ணீர்க் காணிக்கை!

இன்று (02-04-97) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. துரைராசா குடும்பத்தினர்.

குமர கோட்டம்,
கோட்டைக்காடு,
மல்லாகம்.

(46087)

# காரைநகரில் இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 2

காரைநகரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின் போது கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இதன் பின்னர் இடம் பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

காரைநகரைச் சேர்ந்த தர்மராசா ஜனார்த்தனன் (வயது22)என்ற இந்த இளைஞனின் சடலம் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. சடலத்தைப் பொறுப்பேற்க காரைநகரிலிருந்து அந்த இளைஞனின் உறவினர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தனர்.

இதற்கிடையில் —

காரைநகர்ப் பிரதேசத்தில் தேடுதல் நடத்திய படையினர் மீது கிரனேட் வீசிய விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் படையினரால் கொல்லப் பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில்அறிவித்தன.

(உ-ஐ-3-15)

# ஆபத்துக்கால கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம் ஏப். 2

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கான ஆபத்துக் காலக் கொடுப்பனவுகள் இது வரை வழங்கப்படவில்லை.

(இ-111)

வலி. கிழக்கு வடபகுதி
ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி
(வ. து)

## அறிவித்தல்

**பயிலுநர் இலிகிதர் பதவி**

மேற்படி பதவிக்கு விண்ணப்பதாரர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:- 18 - 04 - 1997
நண்பகல் 12 - 00 மணி

கல்வித் தகைமை:- கூட்டுறவுப் பணியாளர்
சாதாரணம் / உயர் தரத்தில் சித்தி

சங்க தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/ செலுத்தி சங்க தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்**
வலி, கிழக்கு (வ. ப) ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி.

(சி-405)

## வரலாற்றுச் சாதனை புரிந்த சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்

1997 ஆம் ஆண்டுக்கான உடற்பயிற்சிப் போட்டியில், 15 வயதுக்கு உட்பட்ட பிரிவில், மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட எமது மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
நலன் விரும்பிகள்.
சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்,
குருநகர்.

(46105)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் W.J.P. ஞானறட்ணம்**

எமது பாடசாலையில் 40 ஆண்டுகள் ஆசிரியராக, பழைய மாணவர் சங்கத்தின் மூத்த உறுப்பினராக, பதிப்பாசிரியராக, உப தலைவராக அருஞ்சேவையாற்றி அமரராகிவிட்ட W.J.P. ஞானறட்ணம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,
சென். பற்றிக்ஸ் கல்லூரி.

(46107)

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

**அமரர் கணபதிப்பிள்ளை பத்மநாதன்**

(கிராம அலுவலர், பளை நகரம்)

பளைப் பிரிவு குடும்பநல சுகாதார அலுவலர்
திருமதி பரமேஸ்வரி பத்மநாதன் அவர்களின்
அன்புக் கணவர்
**கணபதிப்பிள்ளை பத்மநாதன்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக
உத்தியோகத்தர்கள்,
சாவகச்சேரி,

(சி-398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [stamp]

# உதயன்

## அடிக்கிணற்றுக் கல்லாகிவிடுமா?

இப்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத்தை மாற்றி, நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கி, புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது என்பது சந்திரிகா அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் பிரதானமானது.

அரசமைப்புச் சட்ட மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு கால அவகாசம் கூட விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவகாசங்கள் அவமாகிப் போய், தேக்க நிலை உண்டானது.

இத்தகைய சூழ்நிலையில், அரசமைப்பை மாற்றும் செயற்பாடு எதிர்வரும் மாதங்களில் வலுவுடன் விசையுடன் முன்னெடுக்கப்படும் என்று கூறி —

அரசமைப்பு நீதித்துறை அமைச்சர் பேராசியர் ஜி. எல். பீரிஸ் கடந்த புதன் கிழமை (26 ஆம் திகதி) உத்தேச புதிய அரசமைப்பின் 18 அத்தியாயங்களைப் பகிரங்கப்படுத்தினார்.

பிரஸ்தாப அத்தியாயங்களில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அதிகாரப் பரவல் குறித்த அத்தியாயம் இல்லை. அது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து முடித்து, தனது நிலைப்பாட்டைத் தீர்மானிக்கவில்லை என்பதால் அது வெளியிடப்படவில்லை.

மக்களும் அரசும் இறைமையும் என்ற முதலாவது அத்தியாயத்தில், நாடு பிராந்தியங்களின் ஒன்றியமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அந்த முதலாவது அத்தியாயம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் அங்கீகரிக்கப்படவில்லை.

எனவே அரசு வெளியிட்ட அரசமைப்புத் திருத்தச் சட்ட அத்தியாயங்கள் குறித்து விரிவாகவோ, நுணுக்கமாகவோ உடனடியாக ஆராய வேண்டிய அவசரம் இல்லை எனலாம்.

பதினெட்டு அத்தியாயங்களையும் அமைச்சர் பீரிஸ் வெளியிட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விவாதம் முடிவுறாத நிலையில் அரசமைப்பு சீர்திருத்த அத்தியாயங்களை வெளியிட்டது தவறு; நாடாளுமன்றநிலையியற்சட்டத்தை மீறும் செயல் என்று கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஒழுங்குப் பிரேரணை கொண்டு வரப் போவதாகவும், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் ஐ.தே.க. முழங்கியிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற களிப்பில் அரசு அரசமைப்புச் சட்டத் திருத்த அத்தியாயங்களை வெளியிட்டு விட்டது.

ஐ. தே. கட்சி அதனைச் சாட்டாக வைத்து தெரிவுக் குழுச் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அத்தகைய ஒரு நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்தில் இயங்கிய மங்களமுனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் போலவே, இப்போதைய குழுவின் ஆக்கமும் அடிக் கிணற்றில் போட்ட கல்லாகிப் போய் விடும் ஆபத்து உண்டு.

புத்தாண்டுக்கு முன்

# 5 ஜெனரேட்டர்கள் யாழ். வந்து சேரும்

கொழும்பு, ஏப். 2

யாழ். மாவட்டத்துக்கென பிரிட்டிஷ் அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ள ஐந்து ஜெனரேட்டர்களையும் கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் எடுத்து வர மின்சார சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஒவ்வொன்றும் 250 கே.வி. வலுவுள்ள இந்த ஜெனரேட்டர்கள் புத்தாண்டுக்கு முன்னர் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அவை வந்து சேர்ந்ததும் உடனடியாகப் பாவனையாளர்களுக்கு மின்விநியோகத்தை மேற்கொள்ள வசதியாக மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் —

இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்

# கொக்குவிலில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப். 2

கொக்குவில் நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை பெரும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை ஒன்றை படையினர் மேற்கொண்டனர்.

வீதியில் சென்றோர், மற்றும் பாடசாலை மாணவர்கள் நீண்ட நேரம் மறித்து வைக்கப்பட்டு பின்னர் நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்து விடுவிக்கப்பட்டனர்.

தொல்புரம், சுழிபுரம் பகுதியிலும் நேற்றுக் காலை தேடுதல் இடம்பெற்றது.

வடமராட்சி கரணவாய் பகுதியிலும் நேற்றுக் காலை படையினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

(உ-3-173)

## விளையாட்டு விழா

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும்கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தசிறார்கள், பொதுமக்களுக்கான விளையாட்டு விழா நாளை முதல் சனிக்கிழமை வரை மண்கும்பான் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (உ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடக்கும் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை 'ஐரோப்பா — பிரிவில் இருந்து ஐக்கியத்தையும், தனி ஒருமைப்பாட்டையும் நோக்கி' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (உ-3)

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் ஏப். 2

மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் உதவி முகாமையாளராகவும், மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து ஓய்வு பெற்ற நடராசா செல்வநாயகத்துக்கு இன்று சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் சேவை நலன் பாராட்டு விழா நடைபெறுகிறது. (இ)

## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணம் ரயில் நிலையப் பகுதியில் நேற்றுக் காலை நடந்து சென்ற ஒருவர் மிதி வெடியில் சிக்கி வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியைச் சேர்ந்த தவராசா சூசைதாஸன் (வயது 20) படுகாயமுற்றவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார். (உ-15-30)

## நாளை

**பங்குனி 21**

வியாழக்கிழமை

திதி: ஏகாதசி

இரவு 2.10 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

முற்பகல் 10.59 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 7.40-9.10

ராகுகாலம்: 1.40-3.10

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் கொழும்பில் உயர் மட்ட மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது. இன்று கொழும்பு செல்லும் அரச அதிபரும் இது தொடர்பான பேச்சுக்களில் அங்கு ஈடுபடுவார்.

தற்சமயம் காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் வரும் வேளைகளில் துறை முகத்தில் ஏனைய வேலைகள் பாதிக்கப்படுவதாலும் —

இக் கப்பல்களில் பயணம் செய்ய யாழ்ப்பாணத்தில் இருந்து செல்பவர்களும், இக் கப்பல்களில் யாழ்ப்பாணம் நோக்கி வருபவர்களும் — காங்கேசன் துறையில் இருந்து யாழ். நகருக்கு வந்து சேர்வதில் உள்ள பாதுகாப்புக் கெடுபிடிகளை தவிர்க்கும் வகையிலும் —

இந்தப் புதிய திட்டத்தை செயற்படுத்த ஆலோசிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

குருநகர் இறங்கு துறைப் பகுதியில் 8 அடி உயரத்துக்கு நீர்மட்டம் உள்ளதால், தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள பயணிகள் கப்பல்களில் "சஜிந்த" தவிர்ந்த ஏனையவை இத்துறைக்கு வந்து செல்ல முடியும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

குருநகர் இறங்கு துறை செயற்பட ஆரம்பித்த பின்னர், பயணிகள் நேரடியாகக் கப்பலில் இருந்து இறங்கியதும், பதிவு மற்றும் சோதனை நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு உடனடியாக தத்தமது வீடுகளுக்கு திரும்பக் கூடியதாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-3)

## 'அன்ரனோவ்'...

(முதலாம் பக்கத் தொடர்)

அல்ல; விமான ஒட்டிகளின் கவனக் குறைவே என அன்ரனோவ் விமானத்தில் பயிற்சி பெற்ற இலங்கை விமானப் படையைச் சேர்ந்த பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

விமானச் சில்லுகளுக்கான பூட்டு இறுகியதாலே விமானத்தின் சில்லு வெடித்தது என முன்னர் தெரிவிக்கப் பட்டது. ஆனால் தொழில் [illegible] இருக்கவில்லை என அத்துப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (உ-10)

# சுவிஸ் தூதுவர் வவுனியா விஜயம்

வவுனியா, ஏப். 2

கொழும்பில் உள்ள சுவிஸர்லாந்து தூதுவர் மரியான் லூயின் கரோமுன் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

வவுனியா செயலகத்துக்கு வந்த அவர் அங்குள்ள அதிகாரிகளிடம் வவுனியா நிலைமை, மக்கள் நிலை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவை குறித்து கேட்டறிந்தார்.

வடக்கில் இருந்து வவுனியா வரும் பயணிகளை தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் அவர் சந்தித்தார்.

வவுனியாவில் இருந்து வடக்கே அனுப்பப்படும் பொருள்களை சாந்தசோலைப் பகுதியில் லொறிகளில் இருந்து இறக்கி வடக்கிலிருந்து வரும் லொறிகளுக்கு ஏற்றும் நடவடிக்கைகளையும் அவர் நேரில் பார்வையிட்டார். (உ-3)

# லகுபாய் பதக் மரணம்

புதுடில்லி, ஏப். 2

இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக இரண்டு லட்சம் டொலர் ஊழல் மோசடி வழக்குத் தொடரக் காரணமாக இருந்த லகுபாய் பதக் நேற்று லண்டனில் தமது 76 ஆவது வயதில் காலமானார்.

லண்டனில் வதியும் இந்தியரான லகுபாய் பதக், தமக்கு சில இறக்குமதி லைசென்ஸ்களை பெற்றுத் தருவதாகக் கூறி, இரண்டு லட்சம் டொலர்களைத் தம்மிடம் வாங்கி விட்டு தம்மை நரசிம்மராவும் சந்திரசுவாமியும் ஏமாற்றி விட்டதாக முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான வழக்கில் நரசிம்மராவ் எதிரியாக நிறுத்தப்பட்டதை அடுத்தே, பிரதமர் பதவியைத் துறக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில் லகுபாய் பதக்கின் சாட்சியம் மற்றும் அவர் தொடர்பான குறுக்கு விசாரணைகள் பூர்த்தியடைந்து விட்டதால் பதக்கின் மரணம் வழக்கைப் பாதிக்காது என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## மேலும் 2..

(முதலாம் பக்கத் தொடர்)

எனினும் இது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப் படவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பகுதியில் காணாமற் போன 'எம். ஐ-24' ரக ஹெலிக் கொப்டரில் பயணம் செய்த விமானப் படையினரின் சடலங்களாக இவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது

இதற்கிடையில் —

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த இருவரின் சடலங்கள் அழுகிய நிலையில் வேதராண்யத்திலுள்ள் கோயில் பற்று என்ற கிராமத்தில் கரை ஒதுங்கியதாக தமிழக நாளிதழான 'தினத் தந்தி' தெரிவித்துள்ளது.

சடலங்களில் இருந்த சீருடையைக் கொண்டு இலங்கைக் கடற்படையினரின் சடலங்களே அவை எனத் தீர்மானிக்கக் கூடியதாக இருந்ததாக வேதாரண்யம் பகுதி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ரத்தினவேல் தெரிவித்தார்.

சடலங்களில் காணப்பட்ட அடையாள அட்டைகளில் சமரகோன், கருணாநந்த என்ற பெயர்கள் குறிப்பிடப் பட்டிருந்தன.

இந்த இரு சடலங்களும் பிரேத பரிசோதனையின் பின்னர் தஞ்சை மருத்துவக் கல்லூரியின் பிரேத அறைக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தத் தனியார்மயப்படுத்தலால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

அரசு தொடர்ந்து தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் நாம் அதை எதிர்ப்போம். அந்தப் பொறுப்பில் பங்காளியாக நாங்கள் விரும்பவில்லை. எமது எதிர்ப்பைக் கவனத்தில் எடுக்காமல் இந்த விடயத்தில் அரசு தன்னிச்சையாகச் செயற்படுமாயின் எமது கட்சி அரசிலிருந்து வெளியேறிவிடும்.

— இவ்வாறு வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (உ-10)

தென் இந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்
தொழிற் பயிற்சி நிலையம்

இணுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் பயிற்சி நெறிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு **02-04-1997 — 03-04-1997** அன்று நிலையங்களில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நேர்முகப் பரீட்சை காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை நடைபெறும்.

பணிப்பாளர்,
தொழிற் பயிற்சி நிலையம்.

(சி/408)

கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை S. H ஜெபநேசன்
(முன்னாள் மனித மு. ந. நி. இயக்குநர்)

அரச சார்பற்ற நிறுவனங்களோடு இணைந்து அரும் பணியாற்றிய அருட்தந்தை ஜெபநேசன் அவர்களது மறைவை ஒட்டி எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
யாழ்ப்பாணம்.

(46117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வடிவேலு சங்கரப்பிள்ளை

(பென்ஷனியர் யாழ். போதனா வைத்தியசாலை )

சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட வடிவேலு சங்கரப்பிள்ளை 31-03-97 ஆம் திகதி திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் பாசமிகு கணவரும், பாஸ்கரன் (ஹொலண்ட்), ஜெயரட்ணம் (ஜெயம் மாஸ்ரர் – இத்தாலி), பத்மசேனன் (பப்பு - கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி பா. சரஸ்வதி, திருமதி ஜெ. புவனேஸ்வரி (ராணி, கொக்குவில் - இத்தாலி), திருமதி ப. யோகலட்சுமி (நெடுந்தீவு மேற்கு - கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மற்றும் தெய்வேந்திரம், நகுலேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், திருமதி ஞானலிங்கம் புவனேஸ்வரி (B A ஆசிரியர் – கொழும்பு இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற நவயோகராசா மற்றும் திருமதி கிருஸ்ணபிள்ளை மங்களேஸ்வரி (பேபி - ஜேர்மனி), திருமதி அமுதலிங்கம் சந்திரேஸ்வரி (ராணி), பேரின்பராசா (இந்தியா), திருமதி கந்தையா ஜெகதீஸ்வரி (தங்கச்சி – கனடா) ஆகியோரின் பாசமுள்ள சிறிய தந்தையும், திரு. திருமதி மகேந்திரம், ஜெயந்தி (பபி-ஹொலண்ட்), உதயகுமார் (சுவிற்ஸர்லாந்து), கிசோக்குமார் (ஹொலண்ட்), கோமதி (1 ஆம் வருடம் கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்), திரு. திருமதி ஜெயக்காந்தன், சுமதி, ஜெயவிந்தன் (வினோதன்-கனடா), ஜெவீந்திரன் (கொழும்பு) ஜெனீத்தா (கொழும்பு), ஜெயப்பிரியன் (இத்தாலி) பிரகலாதன் (கனடா), ராகவன் (கனடா), ஜெனனி (கனடா) கஜேந்திரன் (1999 A/L, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பாலதுர்க்கா (பாலா, சாவ. இந்துக்கல்லூரி), நளாயினி (பவா, சாவ. இந்துக்கல்லூரி), குமுதா (சூட்டி, சாவ. இந்து), பியோ (சாவ. இந்து) ஆகியோரின் பாசமிகு பேரனும் மகேந்திரம் - மயூரி, (ஹொலண்ட்), ஜெயக்காந்தன், சரண்ஜா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-04-97 ஆம் திகதி அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
சங்கரப்பிள்ளை இரத்தினம்
(மனைவி)

188, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(46100)

## நல்லதம்பி சுப்பிரமணியம்
## (இ. போ. ச. சாரதி)

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் 31-03-97 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், பகீரதன், குருபரன், கோபிநாத், பிரசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், டெனார்த்தனின் சிறிய தந்தையும் கனகசுந்தரம், ஐயம்பிள்ளை, முத்துத்தம்பி, மாணிக்கவாசகர், கனகரத்தினம், பத்மநாதன், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் வரலட்சுமி, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2- 4- 97) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
பாலாம்பிகை (மனைவி),
பிள்ளைகள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.
(46114)

## ஈ. பி. டி. பி. அலுவலகங்கள்

யாழ்ப்பாணம், ஏப் 2

சாவகச்சேரியிலும் பருத்தித்துறையிலும் ஈ. பி. டி. பி. அமைப்பின் அலுவலகங்கள் நேற்று திறந்து வைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## காரைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இருக்கலாம் என்று கடற்படைத் தலைமையகத் தளபதி எம்.கே.என். வீரக்கோன் தெரிவித்தார்.

அந்த இளைஞனின் குடும்பம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

காரைநகர் முகாம் மீது பாரிய தாக்குதல் நடத்த புலிகள் தயாராகி வருவதாகவும் —

முல்லைத்தீவுப் பகுதியில் அண்மையில் புலிகளுக்கு எதிராக நடந்த தாக்குதலில் ஏற்பட்ட சேதத்துக்குப் பதிலடியாகக் கடற்படையினர் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் —

அதையடுத்தே கடற்படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

தலைமன்னார், காரைநகர், காங்கேசன்துறை கடற்படைத் தளங்களும் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்) (உ-3-150)

**House for Rent**

A Spacious Two Storeyed House Available for Rent on Temple Road N.G.O'S Preferable. Contact:- 151, Temple Road, Nallur.
(46118)

**யூனிவேர்சல்**
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
**97, 98 A/L**
**ECONOMICS**
★தேசிய வருமானம்
திரு. V. கருணாகரன்
B.A. (Hons) Dip. In Ed
ஆரம்பம்:- 03- 04- 97
Thu- 3. 30 P. M
(46123)


உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம் பங்குனித் திங்கள்
21 ஆம் நாள் (03 — 04 — 1997) வியாழக்கிழமை
முற்பகல் 8—40 மணி முதல் 10—32 மணி வரை
உள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**சுதாகரன்**
(முகாமைத்துவம், இறுதி வருடம், யாழ். பல்கலைக் கழகம்)
அவர்கட்கும்



எமது புதல்வி
திருநிறை செல்வி
**சுசி**
அவர்கட்கும்

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கலியாண மண்டபத்தில் திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி!

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. பாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்
வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

திருமதி த. குணசிங்கம்
குடும்பத்தினர்
[illegible]
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(46115)

# கண்ணீர் அஞ்சலி

யா/டிறிபேக் கல்லூரி அதிபர்
திரு. மு. நாகேந்திரராஜா அவர்களின் தாயார்
அமரர்
## திருமதி மாணிக்கம் முருகேசு

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உப அதிபர், ஆசிரியர்கள்,**
**ஊழியர்கள், மாணவர்கள்.**

[9457]

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் சின்னையா

சாவகச்சேரி, சங்கத்தானை பிரசித்த நொத்தாரிசும், முன்னாள் சாவகச்சேரி பட்டினசபை உபதலைவரும், முன்னாள் சங்கத்தானை இத்தியடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவுமாகிய வல்லிபுரம் சின்னையா அவர்கள் 27-3-97 இல் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மா, பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும், வல்லிபுரநாதன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இராமநாதன் M.Sc. (பொறியியலாளர் சிங்கப்பூர்), யோகராசா (படவரைஞர் கொழும்பு), விஸ்வநாதன் (நில அளவையாளர் கொழும்பு), சந்திரலேகா, கிருஸ்ணநாதன் (கணக்காளர், நைஜீரியா), பாக்கியலட்சுமி (ஆயுர்வேதப் பட்டதாரி), சண்முகநாதன் B.Sc. (பொறியியலாளர் சிங்கப்பூர்), சுமங்கலராணி B.Com (ஆசிரியை கொழும்பு), சோதிநாதன் (T.A), பாலநாதன் B Sc. (T A, நீர்வளசபை, கொழும்பு), கருணைநாதன் (UK), குகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஈஸ்வரதாசன் (நிறைவேற்று ஆணை வழங்குனர் மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), சக்திதாசன் B Sc. (பொறியியலாளர் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை), முத்துரமணிதரன் (இலிகிதர் பனைவள அபிவிருத்திச்சபை, கொழும்பு), தம்பையா, நமசிவாயம் (நில அளவையாளர்), ஞானேஸ்வரி, பராசக்தி, காஞ்சனா, மங்களேஸ்வரி, வடிவழகி, அமிர்தவல்லி, கல்பனா, சுகந்தா B.Com, இரத்தினரதி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (3-4-97) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஈஸ்வரதாசன்
(மருமகன்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(46124)

## அப்புத்துரை விக்டர் ஜெபசீலன்

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கனடாவில் வசித்தவருமான அப்புத்துரை விக்டர் ஜெபசீலன் கனடாவில் 27-3-97 இல் கர்த்தரின் மகிமைக்குள் அழைக்கப்பட்டுள்ளார்.

இவர் தேவதயாளத்தின் அன்புக் கணவரும், நளினி, சுதர்ஷினி, தஷாயினி, அன்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றொபின், சொலமன், அசோக் ஆகியோரின் அன்பு மாமனாரும், டெறிக், திமோதி, பெஞ்ஜமின், அன்ட்ரு ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
T. சோமநாதர் (சகலன்)

தபாலக வீதி,
சாவகச்சேரி.
(46101)

## திருமதி யோகலட்சுமி துரையப்பா
## (தவமணி)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்பொழுது இடம்பெயர்ந்து வட்டக்கச்சியில் வசித்தவருமான திருமதி யோகலட்சுமி துரையப்பா, (தவமணி) 09-03-97இல் வட்டக்கச்சியில் காலமானார்.

இவர் துரையப்பாவின் (செல்லத்துரை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆசிரியர் நல்லதம்பி, சிவக்கொழுந்துவின் இளையமகளும், யசோ, வசந்தன், சுபா, றமா ஆகியோரின் தயாரும், பகீரதனின் மாமியும், டிலக்ஷனின் பேர்த்தியும், திருமதி கோபால்இரத்தினம் (கிளிநொச்சி) இராசதுரை (அதிபர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), ஏரம்பமூர்த்தி (சூரியபவான் சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டக்கச்சியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. இராசதுரை
ஆசிரியர்
(சகோதரன்)

7 ஆம், வட்டாரம்,
புங்குடுதீவு.
(46125)

**மேலும் மரண அறிவித்தல்**
**2 ஆம் பக்கத்தில்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேகன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org